LIBRARY
13 NOV 1962
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Saturday, 28th July 1962.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

STARRED QUESTIONS

I.—QUESTIONS AND ANSWERS.

Government buses (damages)

* 5 *S.N.Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state the extent of damage caused to the State Transport buses on 19—7—1962 due to the activities of rowdies in Madras City ?

THE HON. SRI R. VENKATARAMAN : Fifty three buses were damaged and rendered temporarily unfit for operation on 19th July 1962 in the course of the demonstrations that occurred on that day. The total value of visible damage to these buses has been estimated at about Rs. 12,000.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த சேதங்கள் எப்படி ஏற்பட்டன ? ஏன் அமைதிக்குறைவான இடத்தில் அந்த பஸ்கள் நிறுத்தப்பட்டிருந்தன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பஸ்கள் எல்லாம் டவுனில் தான் போக வேண்டும். டவுனில் அமைதிக்குறைவு ஏற்பட்டதேயொழிய பஸ் அமைதிக் குறைவாக இருக்கிற இடத்தில் போகவில்லை. 'விஸிபிள் டாமேஜ்' என்றுதான் சொல்லியிருக்கிறேன். கண்ணாடி உடைந்தது, 'வின்ட் ஸ்கிரீன்' போனது, 'மிரர்' போனது, இந்தமாதிரி 'டாமேஜ்' தான் தெரியும். ரோட்டில் ஓட்டும்போது என்ஜினில் ஏதாவது தகராறு ஏற்பட்டிருக்கிறதா என்று பின்னால்தான் சொல்ல முடியும்.

திரு. ஜே. மாதா கவுடர் : இந்த கேள்வியில் ரௌடிகளினால் எவ்வளவு சேதம் ஏற்பட்டது என்று கேட்கப்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக கட்சிக்காரர்கள் நடத்திய மறியல் காரணமாக ரௌடிகள் சேதம் விளைவித்திருந்தால் திராவிட முன்னேற்றக் கழக கட்சி இந்த சேதத்தை ஈடு செய்யும் வகையில் அவர்கள் சொத்துக்களை பறிமுதல் செய்ய அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : I am unable to answer that question.

[28th July 1962

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த நிகழ்ச்சிக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் சம்பந்தம் இல்லையென்று அவர்களே கூறிவிட்டார்கள். மறியலுக்கு பிறகு நடந்தது வேறு. மறியலின் விளைவாக நடந்திருக்கலாம். அது வேறு விஷயம். ரௌடிகள் . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பஸ் கண்ணாடியை உடைத்தவர்கள், கையில் கொடி வைத்திருந்தார்கள். எந்த கம்பில் கொடியிருந்ததோ அந்த கம்பை வைத்து அடித்தார்கள் என்று கூறப்படுகிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அந்த வண்டிகள் தாற்காலிகமாக போக முடியாத நிலையில் இருந்தன என்கிறார்கள். கண்ணாடி உடைந்ததினால் மட்டும் போக முடியாமல் இருந்ததா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : உடைந்த கண்ணாடியை வைத்துக்கொண்டு வண்டியை ஓட்டமுடியாது. வண்டி ஓடவேண்டுமென்றால் அதை 'ரீப்ளேஸ்' செய்யவேண்டும். 'மிரர்' இல்லாவிடில் பின்னால் வரும் வண்டி தெரியாது. ஆகவே தாற்காலிகமாக ஓட்ட முடியவில்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : முன்பு ஒரு சமயம் நமது நாட்டின் பிரதமர் சென்னைக்கு வந்திருக்கும்போது இதே கட்சியினர் மறியல் செய்து பஸ்களுக்கு தீ இடப்பட்டதே, அந்த நஷ்டத்தை வசூல் செய்ய இதுவரை அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : யாரிடம் வசூல் செய்வது என்று தெரியவில்லை.

SRI C. CHIRANJEEVULU NAIDU : May I know how much damage had been caused to private cars ?

THE HON. SRI R. VENKATARAMAN : I have no information on that.

திரு. கே. மூக்கையா தேவர் : திராவிட முன்னேற்றக் கழகக் கொடியை பிடித்துக்கொண்டு கார்களை அடித்தார்கள் என்று சொன்னார்கள். அதேமாதிரி கட்சியைச் சேராதவர்கள் அக்கொடியைப் பிடித்துக்கொண்டு அவர்கள்மேல் பொல்லாப்பு சொல்ல அப்படி அடித்தார்கள் என்று தெரியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எவ்வளவோ வாதம் பண்ணலாம்.

கனம் சபாநாயகர் : இந்தக் கேள்வியைப் போடுகிறவர்களுக்கு, வேறு ஆட்கள்தான் அடித்தார்கள் என்று தெரியுமா ?

திரு. மீ. கலியாணசுந்தரம் : அந்த மாதிரி ஒரு ரிப்போர்ட் இருக்கிறது அமைச்சருக்குத் தெரியுமா ?

28th July 1962]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தமாதிரி ரிப்போர்ட் சர்க்காருக்கு வரவில்லை. சர்க்காருக்குள்ள ரிப்போர்ட், கொடிகளை வைத்துக்கொண்டு கொடி வைத்திருக்கும் கம்பால் அடித்து க்ளாஸை உடைத்தார்கள் என்பது. வேறு விதமாக வாதம் செய்வது, அவரவர்கள் திறமையைப் பொறுத்திருக்கிறது.

திரு. வை. சங்கரன் : கண்ணாடி உடைபட்டது மட்டுமல்லாது, வேறு என்னென்ன சேதங்கள் ஏற்பட்டன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : வண்டி லைனில் ஓடி ஏதாவது "ஃபால்ட்" தெரிந்தால் என்ஜினைப் பிரித்துப் பார்ப்பார்கள். அப்பொழுது அடித்ததால் வந்ததா, தானாக வந்ததா என்று தெரியும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : வண்டி ஓட்டிய டிரைவர், கண்டக்டருக்கு அடி உண்டா, காயம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இரண்டு ட்ரைவர்களுக்கு பலத்த காயம். பலருக்கு சிறு காயம்.

திரு. டி. எல். சசிவர்ண தேவர் : கலவரம் நடந்த அன்றே, மறுதினமோ ட்ரைவர்கள், கண்டக்டர்கள் எல்லாம்—கம்யூனிஸ்ட் கட்சி நடத்தும் யூனியனைச் சேர்ந்தவர்கள்—வேலை நிறுத்தம் செய்தார்களா ? அவர்கள் பஸ் பூராவையும் வழியில் போட்டு விட்டார்கள் என்று சொல்வதில் உண்மை இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அப்படி எனக்கு தகவல் இல்லை. சம்பவம் நடந்த அன்று மத்தியானம் இரண்டாவது ஷிப்ட் நடக்கிறபோது சிலர் இந்தமாதிரி கலவரம் நடக்கிறது, ஓட்டுவதற்கு பயமாயிருக்கிறதென்று சொன்னார்கள். அதற்குப் பிறகு டைரக்டர் அவர்கள் சென்று எப்படியும் நகர பஸ் சர்வீஸை 'மெயின்டெயின்' செய்யவேண்டும், கொஞ்சம் பயம் இருந்தால் கூட தைரியமாக எடுத்து ஓட்டவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அதன் பிரகாரம் பல வண்டிகள் ஓடின. பாரீஸ் கார்னரைச் சுற்றி ஏராளம் கற்கள் வந்து விழுந்திருந்ததால் அங்கு வண்டி போக முடியாமல், சென்ட்ரலில் இருந்தும், மௌண்ட் ரோடிலிருந்து திருப்பி விடப்பட்டன.

திரு. ர. ஜீவரத்தினம் : தனிப்பட்ட நபர்களின் கார்களுக்கு சேதம் விளைவித்திருக்கிறார்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர். அப்படி சேதம் அடைந்த கார் சொந்தக்காரர்களுக்கு அந்த கட்சியினரிடமிருந்தோ, தலைவர்களிடமிருந்தோ நஷ்டத் தொகையை வசூலித்துக் கொடுக்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவர்களே கேஸ் போட்டு ருஜுவானால் டாமேஜஸ் கொடுக்கப்படும்.

திரு. ஜே. மாதா கவுடர் : கொடி பிடித்து வந்து தாக்கினார்கள் என்றால், திராவிட முன்னேற்றக் கழகக் கொடி கொண்டு தாக்கினார்கள் என்று தொழிலாளர்களிடமிருந்து தகவல்

[28th July 1962

வந்திருந்தால், கனம் தொழில் அமைச்சர் அவர்கள் நடவடிக்கைகள் எடுக்க முடியாவிட்டாலும், அதை போலீஸ் அமைச்சர் அவர்களிடம் தெரியப்படுத்தி அந்த நஷ்டத்தை ஈடு செய்ய வேண்டுமென்று கனம் தொழில் அமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறுரா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எங்களுக்கு தகவல் கிடைத்தது, ட்டைவர், கண்டக்டர்களிடம் இருந்து. ஒரு கொடிதான் எடுத்து வந்திருந்தார்கள். வேறு எந்தக் கட்சிக் கொடியும் எடுத்து வரவில்லே. திராவிட முன்னேற்றக் கழகக் கொடிதான் எடுத்து வரப்பட்டது. அதை வைத்துத்தான் அடித்தார்கள் என்று எனக்குத் தகவல்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : எந்தக் கொடியை வைத்து தாக்கினுர்கள் என்பது பிரச்னே அல்ல. தாக்கும் நோக்கம் இருக்கக்கூடியவர்கள் எந்தக் கொடியை வைத்து வேண்டுமானுலும் தாக்கலாம். காங்கிரஸ் கொடியை எடுத்துக் கொண்டு தப்பான காரியம் செய்யக்கூடியவர்களும் இருக்கிறுர்கள். புறம்போக்கு நிலத்தில் காங்கிரஸ் கொடியைப்போட்டால் கிளப்பமாட்டார்கள் என்றும் இருக்கிறுர்கள். ட்ரைவர், கண்டக்டர்கள் பஸ்ஸை நிறுத்திவிட்டார்கள் என்று கூறினுர்கள் எந்தவித பாதுகாப்பும் இல்லாத காரணத்தினுல் பஸ்கள் நிறுத்தப்பட்டனவா, அல்லது பாதுகாப்பு இருந்தும் ஓட்டக்கூடாது என்ற நோக்கத்தோடு அவர்கள் நிறுத்தினுர்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அப்படி வேண்டுமென்று நிறுத்தவில்லே. பயமாகயிருக்கிறது, கற்கள் சரமாரியாக விழுகின்றன என்று சொன்னுர்கள். வேண்டுமென்று நிறுத்துவதாகயிருந்தால் மௌண்ட் ரோட்டிற்கும், சென்ட்ராலுக்கும் ஓட்டியிருக்கமாட்டார்கள்.

திரு. கே. மூக்கையா தேவர் : ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ் பூராவும் இன்ஷ்யூர் செய்யப்பட்டவைதானே. ஆகவே ஏற்பட்ட நஷ்டத்தை, இன்ஷூரன்ஸ் கம்பெனி ஈடுசெய்துவிடும் அல்லவா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட் பஸ்களே இன்ஷ்யூர் செய்வதில்லே. சர்க்கார் தனியாக நிதி வைத்திருக்கிறுர்கள். அந்த நிதியில் வருடா வருடம் கொஞ்சம் பணம் போட்டுக் கொண்டிருக்கிறுர்கள். ஆக்ஸிடெண்ட் ரிசர்வ் பண்ட் என்று வைத்திருக்கிறுர்கள். இன்ஷூரன்ஸ் செய்யவேண்டுமென்ற அவசியம் இல்லே. Government is its own insurer in many cases.

திரு. கே. மூக்கையா தேவர் : இந்த சபையில் உள்ள எஸ். எஸ். ராஜேந்திரன் அவர்களின் கார் அடிபட்டு நொறுங்கியிருக்கிறதா ? அது சம்பந்தமாக அரசாங்கத்திற்கு தகவல் ஏதாவது இருக்கிறதா ?

கனம் சபாநாயகர் : கம்ப்ளெயின்ட் செய்யுங்கள்.

28th July 1962]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இது சர்க்கார் பஸ்ஸைப் பற்றிய கேள்வி.

திரு. வை. சங்கரன்: நகரத்தில் ஒரு பகுதியில் கலவரம் நடந்ததை வைத்துக் கொண்டு மற்றப் பகுதிகளிலும் கலவரம் வரலாம் என்று சொல்லி டாக்ஸி ட்ரைவர்கள் ஓட்டமாட்டோம் என்று சொல்லி, யாரும் வரவில்லை. அதனால் மக்களுக்கு அதிகப்படியான கஷ்டம் ஏற்பட்டது சர்க்காருக்குத் தெரியுமா? ஆகவே இனி இப்படிப்பட்ட நிலை மறுபடி ஏற்பட்டால் இத்தகைய நெருக்கடி வராது பார்த்துக் கொள்ளப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கலவரம் ஏற்பட்டால் எல்லோரும் பயப்படுவார்கள் என்று இதிலிருந்து தெரிகிறது.

* * * *

திரு. ஆ. கு. சுப்பையா: சம்பவத் தினத்தன்று பிரயாணம் செய்த பிரயாணிகள் தாக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. அப்படி தாக்கப்பட்டவர்கள் சர்க்காரிடத்தில் ஏதாவது நஷ்டஈடு கோரினர்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சிலருக்கு காயங்கள் ஏற்பட்டதாக சர்க்காருக்குத் தகவல் வந்திருக்கிறது. இதுவரையில் யாரும் சர்க்காரிடத்தில் நஷ்டஈடு கேட்கவில்லை. இந்தக் கேள்வியைக் கேட்ட பிறகு யாராவது கேட்பார்களோ என்னவோ தெரியவில்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர்: சம்பவத் தினத்தன்று சர்க்கார் பஸ்ஸில் இரண்டு பெண்கள் இருந்ததாகவும், அவர்களுடைய ஆடைகள் கிழிக்கப்பட்டு, அவர்கள் அவமானப்படுத்தப்பட்டார்கள் என்கின்ற தகவல் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்தமாதிரி தகவல் இல்லை.

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர்: கற்கள் வீசியதின் காரணமாக ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் பஸ்ஸிலிருந்த கண்டக்டர்கள், டிரைவர்கள் இவர்களுக்கு காயம் ஏற்பட்டதா? அப்படி ஏதாவது தகவல் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இரண்டு பேர்களுக்குப் பலமான காயம் ஏற்பட்டதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. இன்னும் பலருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டதாகவும் தகவல் வந்திருக்கிறது.

திரு. பி. பழனிப் பிள்ளை: ஸார், பாரதத்தின் பிரதமர் சமீபத்தில் இங்கு விஜயம் செய்த போது திராவிட முன்னேற்றக் கழகத்தார் மறியல் செய்ததையும், அதனால் ஏற்பட்ட விளைவுகளை அப்படியே விட்டு வைத்ததினால் தான் இம்மாதிரி மீண்டும் மறியல், தாக்குதல்கள் போன்றவைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதையும் சர்க்கார் ஒத்துக்கொள்கிறார்களா?

---

* Expunged as ordered by the Chair.

[28th July 1962

கனம் திரு. ஆர் வெங்கட்டராமன் : இம்மாதிரியான கலவரங்கள் ஏற்படும் போது சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. சட்டத்தை மீறி மீண்டும் யாராவது கலவரம் செய்கிறார்கள் என்றால் மீண்டும் அவர்கள் பேரில் சட்டப்படி நடவடிக்கை எடுக்கவேண்டியது தான்.

திருமதி பி. கே. ஆர். லட்சுமிகாந்தம் : இந்த கலவரத்தில் தாக்கியதாக கூறினார்கள். அப்படி தாக்கினார்கள் என்றால் கம்புகளைக் கொண்டு தாக்கினார்களா அல்லது வேறு கற்கள் முதலியவைகளால் தாக்கினார்களா ? இவ்விதம் கம்பு கொண்டு தாக்கியிருந்தால் இம்மாதிரியான கம்புகளை முன்கூட்டியே அவர்கள் கொண்டு வந்திருந்தார்களா என்பதை அறிய வேண்டுகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இரண்டு முறைகளில் தாக்கப்பட்டதாக தெரிகிறது. கொடிகள் கட்டப்பட்டிருந்த கம்புகள் மூலமாகவும், கற்கள் மூலமாகவும் தாக்கப்பட்டதாக தகவல்கள் வந்தன.

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் : இதில் சம்பந்தப்பட்ட டிரைவர்கள், கண்டக்டர்கள் இவர்களின் வீரமான செயலுக்காக சர்க்கார் அவர்களுக்கு ஏதாவது ரிவார்ட் கொடுக்க உத்தேசித்திருக்கிறார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எதை எதை செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்ய அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது.

கனம் சபாநாயகர் : ரிவார்ட் யாருக்கு, காரை அடித்தவர்களுக்கா . . .

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : காரை ஓட்டினவர்களுக்கு . . .

திரு. கே. மூக்கையா தேவர் : இந்த கலவரத்தின் போது, சர்க்கார் பஸ்கள் சேதப்பட்டதற்கும், தங்கள் கட்சிக்கும் சம்பந்தமில்லை என்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தலைவர்கள் அமைச்சர் அவர்களை கண்டு சொன்னதுண்டா ? அப்படி சொன்னார்கள் என்றால் அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பல பேர் பலவிதமாக பேசிக் கொள்கிறார்கள். என்னிடத்தில் எழுத்து மூலமாக யாரும் எந்தவிதமான அறிக்கையையும் தெரிவிக்கவில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் கலகம் செய்யும் போது கொடிகம்புகளில் பிளேட் ஆணி முதலியவைகளையும் வைத்திருந்ததாக சொல்லப்படுகிறதே, அதைப்பற்றி சர்க்காருக்கு ஏதாவது தகவல் உண்டா ?

28th July 1962]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சர்க்கார் பஸ்கள் சம்பந்த மான கேள்வி இது. இம்மாதிரிப்பட்ட விவரங்களை எனது சக அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டால் பதில் தருவார்கள்.

திரு. ஜே. மாதா கவுடர் : ஸார், பஸ் மீது விசப்பட்ட கற்கள் சிறிய கற்களா? அல்லது பெரிய கற்களா? பெரிய கற்களாக வந்து விழுந்ததாகத்தான் பத்திரிகையில் எல்லாம் படம் பிடித்துப் போட்டிருந்தார்கள். ஆகவே இம்மாதிரியான பெரிய கற்களை முன்பே தயார் செய்து கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை சர்க்கார் உணருவார்களா?

கனம் சபாநாயகர் : சிறிய கல் எத்தனை பவுண்டு, பெரிய கல் எத்தனை பவுண்டு, எப்படி இதை நிர்ணயம் செய்கிறீர்கள்? . . .

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சில போட்டோக்கள் எல்லாம் பத்திரிகையில் வந்திருந்தன. அதில் பல பெரிய கற்களும் இருந்தன, பல சிறிய கற்களும் இருந்தன.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், பஸ் சேதம் அடைந்த நிகழ்ச்சிகள் சம்பந்தமாக குற்றங்கள் பதிவு செய்யப்பட்டு யாராவது கைது செய்யப்பட்டிருக்கிறார்களா? இந்த நிகழ்ச்சிக்கும் தங்க ளுக்கும் சம்பந்தமில்லை என்பதை திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தலைவர்கள், தங்கள் பத்திரிகையில் அறிக்கை விட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, குற்றவாளிகளை கண்டு பிடிப்பதற்கு உதவி செய்யவும் தயாராக இருக்கிறோம் என்று சொல்லியிருப்பதாக தெரிகிறது. அப்படியானால் அந்த உதவியை சர்க்கார் நாடியதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : குற்றவாளிகளை கண்டு பிடிப்பதற்கு சர்க்காருக்கு இவர்களுடைய உதவி தேவையில்லை. குற்றவாளிகள் யார் என்று கண்டுபிடிக்கப்பட்டபிறகு, யார் யார் பலாத்காரத்தில் இறங்கினார்களோ அவர்கள் பேரில் வழக்குகள் போடப்படும், என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : இந்த கல்லடி வீரர்களை கடுமையாக தண்டிக்க அரசாங்கம் யோசிக்குமா, அல்லது ஏதோ பத்து ரூபாய் அபராதத்தைப் போட்டுவிட்டு விட்டுவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது கோர்ட் தீர்மானிக்க வேண்டியது.

SRI M. KALYANASUNDARAM: Sir, on a point of order. The question is out of order. It would amount to insinuation against the Court.

MR. SPEAKER: Certainly. The punishment to be awarded is not by the hon. Member or by the Government. It has to be done only by the Court. Therefore, the question is out of order.

திரு. ஆ. கு. சுப்பையா : ஸார், அமைச்சர் அவர்கள் கூறு கின்ற பொழுது, 52 பஸ்களில் கண்ணாடிகள் உடைபட்டிருக் கின்றன என்று சொன்னார்கள். அப்படியானால் இப்போது ரிப்பேர் செய்யப்பட்டு எத்தனை பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன? எத்தனை பஸ்கள் இன்னும் ரிப்பேர் செய்யப்படாமல் ஷெட்டில் நிற்கின்றன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ரிப்பேர் செய்து கொண் டிருக்கிறார்கள், பல பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன, எத்தனை பஸ்கள் என்கிற விபரங்களுக்கு தனியாக கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

பாகிஸ்தான் அகதிகள்

*731 கேள்வி.—திரு. புலவர் கா. கோவிந்தன் : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) பாகிஸ்தான் அகதிகளாக வந்தவர்களில் தமிழக அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர் எத்தனை பேர்?

(இ) இவர்களின் புனர்வாழ்விற்காகத் தமிழக அரசு அளித் திருக்கும் வசதிகள் யாவை?

(உ) அவர்களுக்காகச் செலவிட்டிருக்கும் தொகை எவ் வளவு?

(எ) அது மான்யமாக வழங்கப்பட்டதா, அல்லது கடனாக வழங்கப்பட்டதா?

(ஐ) கடனாயின், இதுவரை திரும்பப் பெற்றது எவ்வளவு?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) About 1,526 persons.

(இ) The following loan facilities have been granted :—

(i) Business loan,
(ii) House loan, and
(iii) Educational loan.

(உ) Rs. 6,99,400.68 nP.

(எ) Repayable loan.

(ஐ) Rs. 2,12,436.10 nP.

New Universities

***732 Q.**—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) Whether any proposal was made to the Government of India, for opening a new University in Tamilnad;

(*b*) if so, the details thereof; and

(*c*) the present stage of the proposal ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.